செ.வெ. எண். 38 **பத்திரிக்கை செய்தி** நாள். 17.4.2017

---

திருநெல்வேலி மாவட்டத்தில் 01.04.2017-ம் தேதி முதல் நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக புதிய மின்னணு குடும்ப அட்டை (ஸ்மார்ட் கார்டு) வழங்கப்பட்டு வருகிறது. தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக **162715** ஸ்மார்ட் கார்டுகள், **திருநெல்வேலி, சங்கரன்கோவில், தென்காசி, செங்கோட்டை, சிவகிரி, அம்பாசமுத்திரம், நான்குனேரி, இராதாபுரம், வீ.கே.புதூர்,ஆலங்குளம்,திருவேங்கடம், மானூர், மற்றும் சேரன்மகாதேவி** ஆகிய 13 வட்டங்களுக்கு வரப்பெற்றுள்ளது. ஸ்மார்ட் கார்டு அச்சிடப்பட்டு வரப்பெற்றுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு ஸ்மார்ட் கார்டு பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக எட்டு இலக்கங்கள் கொண்ட **OTP (One Time Permission)** எண் மற்றும் குறுஞ்செய்தி (SMS) தாங்கள் ஏற்கனவே நியாய விலைக் கடையில் பதிவு செய்துள்ள தங்களது மொபைல் எண்ணுக்கு வரும் அந்த எண் மற்றும் குறுஞ்செய்தியை அழிக்காமல் வைத்திருந்து இந்த OTP நம்பரை நீங்கள் ஏற்கனவே அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பெற்று வரும் நியாய விலை கடைகளில் உள்ள விற்பனையாளரிடம் காட்டி ஸ்மார்ட் கார்டினை பெற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் ஸ்மாாட் கார்டு பெற மொபைல் எண் அவசியம் என்பதால் இது வரை மொபைல் எண் பதிவு செய்யாதவர்களும் , ஆதார் எண் பதிவு செய்யாதவர்களும் உடனடியாக நியாய விலைக் கடையின் மூலமாகவும் அல்லது <u>www.tnepds.gov.in</u> என்ற இணையதளம், TNEPDS என்ற APP மூலமாகவும் பதிவு செய்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

---

ந.க.எண். ண6/11250/16

மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம்
திருநெல்வேலி.
நாள்: .04.2017.

வெளியீடு
செய்தி மக்கள்தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி

(கையொப்பம்) 13/4/17
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி